# குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்-7

## இளங்கலை தமிழிலக்கியம் - மூன்றாமாண்டு- ஐந்தாம் பருவம்

## தண்டியலங்காரம்- 18K5T10

## அலகு - 3 வேற்றுமையணி, ஒட்டணி, அதிசயவணி, தற்குறிப்பேற்றணி

### I. வேற்றுமை அணி - இரண்டு மதிப்பெண்களுக்குரிய வினாவிடை:

**1. வேற்றுமை அணி என்றால் என்ன?**

கவிஞன் ஒப்புமை உடைய இரு பொருள்களை எடுத்துக்கொண்டு முன்னர் அவற்றிற்குரிய ஒப்புமையைக் கூறுவான். பின் வேற்றுமையையும் கூறி வேறுபடுத்துவது வேற்றுமையணி ஆகும்.

**2. உயர்ச்சி வேற்றுமை என்றால் என்ன?**

ஒரு பொருளுக்குக் காட்டப்படும் உவமையைவிட அப்பொருள் உயர்வுடையது எனக் கூறி வேற்றுமைப்படுத்துவது உயர்ச்சி வேற்றுமை.

**3. வேற்றுமை அணியின் வகைகள் எத்தனை? அவை யாவை?**

'வேற்றுமை அணியின் வகைகள் நான்கு.
அதுவே
குணம்[1] பொருள்[2] சாதி[3] தொழிலொடும்[4] புணரும்.'

**4. ஒட்டணி என்றால் என்ன?**

கவிஞன் தான் கூறக் கருதிய ஒன்றை நேரே கூறாமல் விடுத்து அதனை ஒப்புமை உடைய பொருளோடு ஒட்டிக் கூறுவான். தான் சொல்லக் கருதியதை குறிப்பாக உணர்த்த ஒட்டிக் கூறுவதால் ஒட்டணி என்பது காரணப் பெயராயிற்று.

**5.ஒட்டணியின் வகைகள் எத்தனை? அவை யாவை?**

'அதுவே
அடையும் பொருளும் அயல்பட மொழிதலும்

அடை பொது ஆக்கி ஆங்கனம் மொழிதலும்
விரவத் தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்
எனநான் வகையினும் இயலும் என்ப'

**6. அதிசயவணியின் இலக்கணம் யாது?**

'மனப்படும் ஒரு பொருள் வனப்பு உவந்து உரையுழி
உலகு வரம்பு இறவா நிலைமைத்து ஆகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவது அதிசயம்'

**7. அதிசய அணியின் வகைகள் எத்தனை? அவை யாவை?**

வகைகள் ஆறு. அதுதான்,

'பொருள் குணம் தொழில் ஐயம் துணிவே திரிபு எனத்
தெருள் உறத்தோன்றும் நிலைமைய தென்ப'

**8. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சி ஒன்றின் மேல் கவிஞன் தான் கூறக் கருதிய பொருளை ஏற்றிச் சுவைபட உரைப்பது தற்குறிப்பேற்ற அணியாகும்.

**9. தற்குறிப்பேற்ற அணிக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

1. நோக்கணி 2. தற்குறிப்பணி

**10. தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணம் யாது?**

'பெயர்பொருள் அல் பொருள் என இரு பொருளினும்
இயல்பின் விளைதிறன் அன்றி அயல் ஒன்று
தான் குறித்து ஏற்றுதல் தற்குறிப்பேற்றம்'

**II. கட்டுரை வடிவிலான வினா - விடை(10 மதிப்பெண்)**

**1. வேற்றுமை அணியின் வகைகள் குறித்து கட்டுரைக்க.**

வேற்றுமையணியாவது 1. குணத்தோடு 2. பொருளோடும் 3. சாதியொடும் 4. தொழிலொடும் கூடியும் வரும்.

1. **குண வேற்றுமை:** இரண்டு பொருள்களை எடுத்துக் கொண்டு அவற்றின் குணங்களை வேறுபடுத்திக் காட்டுவது

**நூற்பா:** 'சுற்று வில் காமனும்.........'

**விளக்கம்:** பொன்னாலாகிய தொடியினை அணிந்த...........

மேற்கண்ட பாடலில் கூறப்பட்டவர்கள் மன்மதனும், சோழனும் ஆவர். அவர்களிருவரும் கருமை, செம்மை என்னும் நிறத்தால் (குணம்) வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது

**2. பொருள் வேற்றுமை:** தொழிலால் ஒப்புமையுடையவற்றை எடுத்துக் கொண்டு அவற்றைப் பொருளால் வேறுபடுத்திக் காட்டுவது.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** 'ஓங்கலிடை வந்து உயர்ந்தோர்.......................'

இப்பாடலில் கூறப்பட்ட பொருட்கள் சூரியன், தமிழ்.

1. சூரியன் : உதய கிரியில் தோன்றுதல், மேல் மக்களால் தொழப்படுதல், இருள் அகற்றுதல் போன்ற மூன்று குணங்களை உடையது
2. தமிழ் : பொதிய மலையில் தோன்றியமை, அறிவுடையோர் தொழுதேத்தும்படி விளங்குதல், அறியாமையாகிய இருள் அகற்றுதல் ஆகிய மூன்று குணங்களை உடையது.

இவ்விரண்டும் தொழிலால் ஒன்றுபட்டு இருந்தும் பொருளால் வேறுபட்டவை என்பதைக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை.

3. **சாதி வேற்றுமை**: ஒரு சாதிக்குரிய பொருள்களை ஒன்றாக வைத்து அவற்றிடையே வேற்றுமை தோன்றக் கூறுவது.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** ' வெங்கதிர்க்கும் செந்தீ விரிசுடர்க்கும்...........'

**விளக்கம்**: வெம்மையான கதிர்களை உடைய சூரியனுக்கும் நீங்காது ....................................

இப்பாடலில் மருட்சி, இருள் என்னும் இரு பொருள்கள் ஒப்புமைபடுத்தப்பட்டன. மருட்சி என்பது அக இருள். இருள் என்பது புற இருள். இரண்டும் இருள் என்னும் சாதியினைச் சார்ந்தது. புறஇருள் சூரியன், விளக்கு, சந்திரன் ஆகியவற்றின் ஒளியால் நீங்கும். இம் மூன்றாலும் நீங்காதது மருட்சி என குறிப்பால் வேற்றுமை படுத்தப்பட்டுள்ளது

4. **தொழில் வேற்றுமை**: தொழிலால் ஒற்றுமை உடைய இரு பொருள்களை தொழில் நிகழ்ச்சியால் வேறுபடுத்திக் காட்டுவது.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: ‘புனல் நாடற் கோமானும்............’

**விளக்கம்:** நீர் நாட்டின் கோமகனாக விளங்குபவன் சோழன் ....................................

மேற்கண்ட பாடலில் கூறப்பட்ட சோழனும் திருமாலும் உலகைக் காக்கும் தொழிலால் ஒப்புமை உடையவர்கள். ஆயினும் சோழன் பகைவருடன் போரிட்டு மண்ணைப் பெறுவான். திருமால் இரந்து பெறுவான் என பெறுகின்ற முறையில் வேற்றுமைப்படுத்தப்பட்டுள்ளது.

**2. ஒட்டணியின் வகைகள் பற்றி விரித்துரைக்க.**

**இலக்கணம்:** கருதிய பொருள் தொகுத்து.................’

**வகைகள்:** நான்கு.

**நூற்பா**: ‘அதுவே

அடையும் பொருளும்.............’

1. **அடையும் பொருளும் அயல்பட மொழிதல்:** அடைமொழியையும் அடையடுத்த பொருளையும் வேறாக கூறுவது.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: ‘வெறிகொள் இனச்சுரும்பு..........’

**விளக்கம்:** தன்னிடத்து அழகையும் .................................’

இப்பாடலில் கவிஞன் சொல்லக்கருதி மறைத்த பொருள்- தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையிடம் சென்று இன்பம் துய்த்தான் என்பது. இதை வெளிப்படுத்த ஒரு ஆண் வண்டு தனக்கே உரிய தாமரையின் தேனை உண்ணாது பிற வண்டுகளால் நுகரப்பட்ட குவளை மலரின் தேனை உண்டது எனக் காட்டினான்.

சொல்லக் கருதிய பொருள்: தலைவன்

கூறிய பொருள்: வண்டையும் அதற்கேற்ற அடைமொழிகளையும் கூறியுள்ளதால் அடையும், பொருளும் அயல்பட மொழிதல் ஆயிற்று.

2. **அடை பொதுவாக்கி பொருள் வேறுபட மொழிதல்**: அடைமொழிகளைப் பொதுவாகக் கூறி, பொருளை மட்டும் வேறுபடக் கூறுவது.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: உண்நிலவு நீர்மைத்தாய்............

**பொருள்**: உள்ளே நிலவுகின்ற தன்மை உடையதாய்.............

இப்பாடலில் பயின்று அடைகள் வள்ளலுக்கும் சோலைக்கும் பொருந்துவன. கவிஞன் சொல்ல கருதி மறைத்தப் பொருள் வள்ளல். அதைப் புலப்படுத்த எல்லா வகையிலும் ஒத்ததாகக் கூறப்பட்ட பொருள் சோலை. இவ்விரண்டுக்கும் பொருந்துமாறு அடைமொழிகள் கூறப்பட்டன. சொல்லக் கருதிய வள்ளலுக்கு வேறாக சோலையைக் காட்டியதால் இது அடைப்பொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல் ஆயிற்று.

3. **அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதல்:**
கவிஞன் தான் கூறவந்த பொருள்களுக்குச் சில அடைகளைப் பொதுவாக்கிக் கூறுவான். சிலவற்றை ஒன்றற்குச் சிறப்பாக்கிக் கூறுவான். இவ்வாறுதான் கூறக் கருதிய பொருளுக்கு வேறானப் பொருளைக் கூறுதல்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: தண்ணளி சேர்ந்து.........................

**விளக்கம்:** குளிர்ச்சி பொருந்தியது, இனிய சொல்லால் புகழப் பொருந்துவது................................

இது வள்ளலுக்கும் மேகத்திற்கும் பொருந்தும் அடைகள்.

எடுத்துக்காட்டுப் பாடலில் மறைத்து சொல்லப்பட்டப் பொருள் வள்ளல். அதற்கு ஒப்புமை உடையதாகக் காட்டப்பட்டப் பொருள் மேகம். 1. தண்ணளி சேர்தல், 2.எண்ணிய எப்பொருளும் அளித்தல் ஆகிய இரண்டும் வள்ளலுக்கும் மேகத்திற்கும் பொதுவான அடைமொழி. 3. இன்சொல் கூறுதல் வள்ளலுக்கே உரிய சிறப்பு அடைமொழி.

இவ்வாறு விரவிக் கூறப்பட்ட அடைமொழிகள் பொதுவாகவும் ஒன்றற்குச் சிறப்பாகவும் கலந்து வரக்கூறுவது அடை விரவி பொருள் வேறுபட மொழிதல் ஆகும்.

4. **அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல்**:
   சொல்ல மறைத்த பொருளைப் புலப்படுத்திக் காட்டும் பொருளுக்கு பொருந்தாத அடைமொழிகளைச் சேர்த்துக் கூறுவது.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** கடைமிகால் உலகியற்கை...........................

**விளக்கம்**: மிகவும் தாழ்வுடையது....................................................

1. மறைத்து கூறப்பட்ட பொருள் வள்ளல் 2. ஒப்புமை உடையதாகக் காட்டப்பட்ட பொருள் கடல்

எளிதில் அடைய முடியாதது, உப்புச் சுவையுடையது, கருமை நிறத்தை பெற்றது என்னும் கடலின் தன்மைகள் மாறுபடுத்தப்பட்டு, எளிமையாய் அடைதல் தேன் சுவை உடையதாதல், கருமை விரவாமை என காட்டப்பட்டதால் இப்பாடல் அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல் ஆயிற்று.

### 3. அதிசய அணியின் வகைகள் குறித்து விவரிக்க.

**நூற்பா:** ‘அதுதான்

பொருள் குணம் .................’

**விளக்கம்**:பொருள், குணம், .......................................

**பொருள் அதிசயம்**: பொருளால் அதிசயம் தோன்றும்படி கூறுவது. **எடுத்துக்காட்டுப் பாடல்:** 'பண்டு புரம் எரித்த தீட்டல்..................'

**விளக்கம்**: ஒளிபொருந்திய...................................

பாடலில் கவிஞன் சிறப்பித்துக் கூறக் கருதிய பொருள் முப்புரத்தை எரித்தத் தீ. என்றோ நடந்த இந்நிகழ்ச்சியால் தோன்றிய நெருப்பு வான்வெளியில் இன்றும் இருக்கிறது என கவிஞனால் உவந்து சொல்லப்பட்டது. அணையும் தன்மை கொண்ட நெருப்பு இது பல காலமாகியும் அணையாமல் இருக்கிறது என உலக இயல்புக்கு மாறாக வியப்பைத் தருவதாக அமைவதால் பொருள் அதிசயமாகும்.

**குண அதிசயம்**: ஒரு பொருளை குணத்தால் வியக்கும்படியாகக் காட்டுவது. **எடுத்துக்காட்டுப் பாடல்**: மாலை நிலவு ஒளிப்ப .........................

**விளக்கம்**: மாலை நேரத்தில்........................

பாடலில் கவிஞன் கூறக் கருதிய பொருள் நீல மணியின் ஒளி. தலைவி அணிந்த நீல மணியின் ஒளி சந்திரன் ஒளியை மறைத்து தெருவில் இருளை உண்டாக்கியது என உலக இயல்புக்கு மாறாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு பொருளின் பண்பு வியப்பைத் தருவதாகக் கூறப்பட்டதால் குண அதிசயம் ஆயிற்று.

**தொழில் அதிசயம்**: ஒரு பொருளை தொழிலால் வியப்படையும்படியாகக் காட்டுவது.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** ஆளும் பரியும்................................

**விளக்கம்:** தன்பகைவர்களை..........................

இப்பாடலில் வாளினை உறைகழித்தலாகிய தொழிலே கவிஞன் கூற வந்த பொருள். அத்தொழிலால் பல படைகள் வெட்டுண்ணல், குருதி பெருக்கெடுத்தல் போன்ற செயல்கள் நடந்ததாகக் காட்டப்பட்டன. இவை உலக இயல்புக்கு மாறாகக் கூறப்பட்டதால் இது தொழில் அதிசயம்.

**ஐய அதிசயம்**: ஐயுற்றுக் கூறுவதால் அதிசயப்பட எடுத்துரைப்பது. **எடுத்துக்காட்டுப் பாடல்**: உள்ளம் புகுந்து உலாவும் ..................................

**விளக்கம்**: ஒளிவீசும் அணிகலன்களை..........................................

இப்பாடலில் கவிஞன் கூற வந்த பொருள் காதலியின் கண். தலைவன் உள்ளத்தில் புகுந்து உலவுவதால் உண்மைத்தன்மை பொதிந்த சிறிய பொருளாகக் கூறப்பட்டது. உள்ளம் முழுவதையும் கொள்ளை கொண்டதால் மிகப்பெரிய பொருளாகவும் காட்டப்பட்டது. எனினும் விழியின் இயல்பை உலக நடைக்கு மாறாக ஆன்றோர் வியக்கும்படி கூறியுள்ளதால் இது ஐய அதிசயம்.

**துணிவு அதிசயம்:** துணிவுற்றுக் கூறும் முறையில் அதிசயம் தோன்ற உரைப்பது.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: பொங்கி எழுந்து......................................

**விளக்கம்:** எம் தலைவனாக.................................

கவிஞன் கூறவந்த பொருள் பெண்ணின் மெல்லிடை. முதலில் அவை உண்டோ? இல்லையோ? என்று கூறப்பட்டது. பின் மார்புகள் வாயிலாக உண்டு எனத் தெளிவதால் துணிவாயிற்று. கண்ணுக்குத் தோன்றும் இடையை உலகநடைக்கு மாறாக சிறியதாக்கி உண்டெனத் துணிந்ததை ஆன்றோர் வியப்பக்கூறியதால் இது துணிவு அதிசயம்.

**திரிபு அதிசயம்:** ஒன்றனை வேறொன்றாகக் காட்டும் போக்கில் வியப்படையக் கூறுவது.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** திங்கள் சொரி நிலவு................

**விளக்கம்**: நிலா முற்றத்தில்...................................................

பாடலில் கவிஞன் மேம்படுத்தி கூறவந்த பொருள் முற்றத்தில் வீசும் நிலவினது ஒளி. அவ்வொளியைக் கிளி பால் எனக் கருதியது. பெண்கள் தங்களின் ஆடை என கருதினர். ஒன்றை மற்றொன்றாக கருதிய நிலையை உலக இயல்புக்கு மாறாக வியக்கும்படி கூறியதால் இது திரிபு அதிசயம் ஆயிற்று.

**4. தற்குறிப்பேற்ற அணி குறித்து கட்டுரைக்க.**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சி ஒன்றின் மேல் கவிஞன் தான் கூறக் கருதிய பொருளை ஏற்றி சுவைபட உரைப்பது தற்குறிப்பேற்றஅணியாகும்.

ஒன்றை வேறொன்றாக சிந்தித்து சொல்வது இவ்வணியைக் கவிஞன் உடன்பாட்டுக்கும் எதிர்மறைக்கும் பயன்படுத்துவான். இதற்கு நோக்கணி, தற்குறிப்பணி என்னும் பெயர்களும் உண்டு.

**இலக்கணம்:**

**நூற்பா:** 'பெயர் பொருள் அல்பொருள்..................'

**விளக்கம்:** பொருள்கள் 1. இயங்கு பொருள் (பெயரும் பொருள்) 2. இயங்காப் பொருள் (பெயராப் பொருள்) என இரு வகைப்படும்.

1. பெயர் பொருள் தற்குறிப்பேற்றம்: இயங்குகின்ற பொருளில் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சி மீது தன் கருத்தை ஏற்றிக் கூறுவது

**எடுத்துக்காட்டுப் பாடல்:** மண்படுதோள் கிள்ளி.....................

**விளக்கம்:** நிலவுலகத்தைத் தாங்குகின்ற........................

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் சந்திரன். அது ஓரிடத்தில் நில்லாமல் வானின் கண் உலவுவதால் பெயர் பொருளாகும். அது வளர்தலும் தேய்தலும் ஆகிய இயல்புகளைக் கொண்டது. பகைவர் குடைகளை அளித்த யானை, தன் மீதும் பாயும் எனக்கருதி தேய்பிறை ஆக மாறியது சந்திரன் என்பது கவிஞரின் கூற்று. பிறை தேய்கின்ற இயல்புக்குத் தன் கருத்தை ஏற்றிக் கூறியதால் இது பெயர் பொருள் தற்குறிப்பேற்றம்.

**2.பெயராப் பொருள் தற்குறிப்பேற்றம்**: இயங்காத பொருளில் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சி மீது தன் கருத்தை ஏற்றிக் கூறுவது பெயராப்பொருள் தற்குறிப்பேற்றம்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** வேனில் வெயிற்கு உலர்ந்த........................

**விளக்கம்:** முதுவேனில் காலத்தில் கதிரவன்.............................

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் சோலை. இது பெயராதப் பொருள் சோலைகளில் உள்ள மரங்கள் உயர்ந்து வளர்ந்த கிளைகளில் பூவையும் தேனையும் கொண்டிருத்தல் இயல்பு. வெப்பத்தால் வாடிய காலத்தில் மழை பொழிந்தது மேகம். அதற்கு கைமாறாகத் தன்னிடத்தில் உள்ள பொருட்களைச் சோலைகள் கிளையாகிய கையில் ஏந்தி நின்றன என்பது கவிஞன் ஏற்றிக் கூறிய கருத்தாகும். எனவே இது பெயராப்பொருள் தற்குறிப்பேற்றம் ஆயிற்று.

**அலகு - 4 (நுட்ப அணி, இலேச அணி, நிரல்நிறை அணி, சுவையணி)**

1. **நுட்ப அணியில் குறிப்புநுட்பம் குறித்து விளக்குக. (5 மதிப்பெண்)**

ப ிறருடைய கருத்தை அறிந்து அதற்குரிய மறுமொழியைச் சொல்லால் வெளிப்படுத்தாமல் குறிப்பாலோ, செயலாலோ அரிதாக உய்த்துணரும்படி புலப்படுத்துவது நுட்ப அணி. நுணுக்கம், பரிகரணம் என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.

**இலக்கணம்:** 'தெரிபு வேறு கிளவாது.............'

**விளக்கம்:** விளங்க அறிந்து கொண்டதற்கு.....................

**நுட்பம்:** எளிதில் அறிதற்கு அருமை உடையது.

**குறிப்பு:** மனத்துள் கருதிய ஒன்றை உடல் இயக்கங்களால் அறிவிப்பது.

1. **குறிப்பு நுட்பம்**: குறிப்பால் நுட்பமாக உணர்ந்து கொள்ளச் செய்வது.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** காதலன் மெல் உயிர்க்குக்..................

**விளக்கம்:** இளமைத் தன்மை வாய்ந்த...................

ஆயக் கூட்டத்தால் சூழப்பெற்ற தலைவியைக் காண்கின்றான் தலைவன். அருகில் பலர் இருப்பதால் தலைவியைக் கண்டு பேச முடியாமல் மிகவும் வருந்துகிறான். அந்நேரத்தில் தலைவி கதிரவனையும் பார்க்கிறாள். பின்னர் அது சென்று மறைகின்ற மேற்கு திசையையும் பார்க்கின்றாள். இக்குறிப்புகள்

ஞாயிறு மறையும் மாலை காலத்தில் கூடுதற்கு உடன்பட்டாள் என்பதை உய்த்துணர்ந்து கொள்ள வைத்தன ஆதலின் இது குறிப்பு நுட்பம் ஆயிற்று.

**2. இலேச அணியின் வகைகள் குறித்து விவரிக்க. (5 மதிப்பெண்)**

**நூற்பா:** 'புகழ்வது போலப் பழித்திறம்…………

**விளக்கம்**: 1. புகழ்வது போலப் பழித்தல் 2. பழிப்பது போலப் புகழ்ந்து உரைத்தல்

1. **புகழ்வது போலப் பழித்தல்**: ஒன்றனைப் புகழ்வது போல பழித்துக்கூறுதலே புகழ்வது போலப் பழித்தல் ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** மேய கலவி விளை………………………………'

**பொருள்**: தோழியே நம் தலைவன் எப்பொழுதும்…..

புணர்ச்சிக் காலத்தில் தலைவன், தலைவியின் மென்மைத் தன்மை கெடும்படியாகக் கூட வேண்டும். ஆனால் தலைவனோ அவ்வாறு செயல்படவில்லை. இத்தன்மை கொண்ட தலைவனைத் தலைவி 'சாயல் தளராமல் தாங்குமால்' எனப் புகழ்கிறாள். இது தலைவனின் செயலைப் பழிப்பதால், புகழ்வது போலப் பழித்தல் ஆயிற்று.

2. **பழிப்பது போல புகழ்தல்**: ஒன்றனைப் பழிப்பது போலப் புகழ்ந்து கூறுதலே பழிப்பது போலப் புகழ்தல் ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** 'ஆடல் மயில்இயலி அன்பன் அணியாகம்…………………

**பொருள்:** ஆடுகின்ற மயிலை போன்ற மென்மைத் தன்மை உடைய தோழியே, நம்மீது அன்பு வைத்தத் தலைவனுடைய மார்பைக் கூடினேன்.

தலைவனின் இயல்பைக் 'கூடுங்கால் மெல்லென் குறிப்பறியான்'ம எனத் தலைவி பழித்துக் கூறுகிறாள். கூடுங்காலத்து அறிவழிந்து செயல்படுவதே முறையாகும். ஆதலின் இது, பழிப்பது போலப் புகழ்தலாயிற்று.

**3. நிரல்நிறை அணி குறித்து விரித்துரைக்க. (10 மதிப்பெண்)**

கவிஞர் தம் செய்யுள்களில் முதலில் சொற்பொருள்களை வரிசைப்படுத்துவர். அவற்றோடு தொடர்புடையவற்றைப் பின்னர் அதே முறையில் பொருள்படுமாறு வரிசைப்படுத்தி பாடுவர். இவ்வாறு அமைப்பதே நிரல்நிறை என்னும் அணியாகும். இதற்கு அடைவணி என்னும் வேறு பெயரும் உண்டு.

**நிரல்நிறை அணி இலக்கணம்:**

**நூற்பா:** 'நிரல் நிறுத்து இயற்றுதல் நிரல் நிறை அணியே'

**பொருள்:** சொல்லையும் பொருளையும் நிரலேநிறுத்தி நேரே பொருள் கொள்வது நிரல்நிறை என்னும் அணியாகும்.

**முறை நிரல்நிறை:**

எழுவாயாய் அமைந்த பொருள்களையும் அவற்றிற்கு உரிய பயனிலைகளையும் கிடந்த முறையிலேயே இயைத்துப் பொருள் காண்பது முறை நிரல்நிறை அணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** காரிகை மென்மொழியாள்[1] நோக்கால்[2] கதிர் முலையால்[3]

**பொருள்:** அழகிய தோற்றத்தில் பொலிவு பெற்றவள் தலைவி.

இப்பாடலில் முன்னர் வைக்கப்பட்ட பொருள் ஆறு. 1. மொழி, 2. நோக்கு, 3. கொங்கை, 4.புருவம், 5. இடை, 6. கை என்பன. அவற்றிற்கேற்ப கொல்லி, வேல், கோங்கரும்பு, கரும்புவில், வல்லி, முருக்கமலர் என்பவை பின் வைக்கப்பட்டன. இவை மொழியால் தொலைந்தது. கொல்லிப்பண் என்பது முதலாக பொருள்பட நிரலே வைக்கப்பட்டமையால் முறை நிரல்நிறை ஆயிற்று.

**மொழிமாற்று நிரல்நிறை:**

'நிரலே கிடந்த எழுவாய்க்கேற்பப் பயனிலைகளை மாற்றிப் பொருள் பொருந்துமாறு இயைத்துக் காண்பது மொழிமாற்று நிரல்நிறையாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: ஆடவர்கள் எவ்வாறு அகன்று ஒழிவார். வெஃகாவும்.......................

**பொருள்**: நீண்ட திருக்கோலத்தை உடையவன் திருமால்..........

இப்பாடலில் முன்னர் வரிசைப்படுத்தப்பட்ட பொருள்கள் மூன்று. அவை 1.வெஃகா, 2.பாடகம், 3.ஊரகம் என்பன. பின் நிறுத்தப்பட்ட தொழில்கள் நிற்றல், இருத்தல், கிடத்தல் என்பன. இவை முன் நிறுத்தப்பட்ட சொற்களோடு பொருந்துமாறு நிறுத்தப்படவில்லை. வெஃகாவில் கிடந்தான்; பாடகத்திலிருந்தான்; ஊரகத்தில் நின்றான் என சொற்களை மாற்றி இயைபுப்படுத்தப்பட்டதால் இது மொழிமாற்று நிரல்நிறை ஆயிற்று. இதனை 'எதிர் நிரல் நிறை அணி' என்றும் கூறுவர்.

4. **சுவை அணியின் வகைகள் குறித்து கட்டுரைக்க.(10 மதிப்பெண்)**

உள்ளத்தின் கண் நிகழும் தன்மைகளைப் பிறர் அறியும் வகையில் உடலால் புலப்படுத்தி காட்டுவதே மெய்ப்பாடாகும். அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி என்பன. இவை எட்டும் சுவை என்றும் கூறப்படும். இதனை விளக்குவதே சுவையணி ஆகும்.

**சுவை அணியின் இலக்கணம்:**

**நூற்பா:** 'உள்நிகழ் தன்மை புறத்துத் தோன்ற

எண்வகை மெய்ப்பாட்டு இயல்வது சுவையே'

**பொருள்:** உள்ளே நிகழ்ந்த தன்மை புறத்துப் புலனாய் விளங்கும்படியாக எட்டுவகைப்பட்ட மெய்ப்பாட்டினாலும் நடப்பது சுவை என்னும் அணியாகும்.

**சுவை அணியின் வகைகள்:**

**நூற்பா:** 'அவைதாம்

வீரம்[1] அச்சம்[2] இழிப்பொடு[3] வியப்பே[4]
காமம்[5] அவலம்[6] உருத்திரம்[7] நகையே[8]'

**வீரச்சுவை:**

வீரம் காரணமாகத் தோன்றும் சுவையே வீரச்சுவை ஆகும். இது மனத்துணிவினால் புலப்படுத்துவதாகும். ‘கல்வி, தறுகண், இசைமை, கொடை ஆகிய நான்கும் பற்றிப் பெருமிதம் பிறக்கும். அவற்றுள் ஒன்றாகிய தறுகண் என்பது வீரத்தை குறிப்பதாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி ..............

**பொருள்**: தன்னிடத்தே அடைக்கலம் புகுந்த புறாவினது...............

இப்பாடலில் சோழ மரபினரின் கொடை வீரம் சிறப்பிக்கப்படுகிறது. புறாவின் தசைக்காகத் தன் தசையை வைத்து அதன் போதாமைக்காகத் தானே துலை மீது ஏறி நின்ற துணிவைக் காட்டுவதால் இது வீரச்சுவை ஆயிற்று. சிபிச் சக்கரவர்த்தியின் வரலாறு அவனது குலத்தினைச் சார்ந்த சோழன் மீது ஏற்றிப் பாடப்பட்டுள்ளது.

**அச்சச்சுவை**: அச்சம் காரணமாக தோன்றும் சுவையே அச்சச் சுவையாகும். அணங்கு, விலங்கு, கள்வர், இறை ஆகிய நான்கானும் அச்சம் பிறக்கும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: கைநெரித்து[1] வெய்துஉயிர்ப்ப[2] கால்தளர்ந்து[3] மெய் பனிப்ப[4]...........................................

**பொருள்:** சினம் பொருந்திய வேர் படையை உடையவன் ஒரு வீரன். இப்பாடலில் யானையைக் கண்டதன் காரணமாக அச்சத்திற்குரியகை நெரித்தல் முதலான செயல்கள் புலப்படுத்தப்பட்டதால் இது அச்சச்சுவை ஆயிற்று.

**இழிப்புச்சுவை:** இழிப்பு காரணமாகத் தோன்றும் சுவையே இழிப்புச் சுவையாகும். இச்சுவையைத் தொல்காப்பியர் இளிவரல் என குறிப்பிடுகின்றார். இது மூப்பு, பிணி, வருத்தம், மென்மை ஆகிய நான்கு இடமாக பிறக்கும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: ‘உடைதலையும்[1] மூளையும்[2] ஊண்[3] தடியும்[4] என்பும்[5] ........

**பொருள்:** வெற்றியைத் தருகின்ற போரினை செய்யும் ஆற்றல்.

இப்பாடலில் போர்க்களக் காட்சி சிறப்பிக்கப்படுகிறது. அக்களத்தில் காட்டப்படும் உடைந்த தலை, மூளை, கொழுப்பு போன்றவை அருவருப்புச் சுவையை தோற்றுவிக்கின்றன. ஆகையால் இது இழிப்புச் சுவை ஆயிற்று.

**வியப்புச் சுவை:** மன எழுச்சி(வியப்புக்) காரணமாகத் தோன்றும் சுவை வியப்புச் சுவையாகும். இச்சுவையை தொல்காப்பியர் மருட்கை எனக் கூறுகிறார். இது புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்னும் நான்கனைப் பற்றிப் பிறக்கும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** முத்துஅரும்பிச் செம்பொன் முறிதைத்து பைந்துருகின்...........

**பொருள்:** பொன்னையும் மணிகளையும் தன்னுடைய அலைக் கரங்களால்....

இப்பாடலில் குறிக்கப்பெறும் பொருள் கற்பக மரமாகும். அது அரும்பாக முத்து; தளிராக செம்பொன்; பூங்கொத்தாக பவளம் என்பவற்றை பெற்றிருந்தது. அவற்றுடன் கிளைகளின் பலவகை அணிகலன்களை அணிந்து ஒளிர்ந்தது என காட்டப்படுகிறது. இயற்கையான மரத்திற்கு மாறாக காட்டப்பெறும் கற்பகத்தரு புதுமை செறிந்தது. ஆதலால் இது வியப்புச் சுவையைத் தோற்றுவித்தது.

**காமச்சுவை:** காமம் காரணமாகத் தோன்றும் சுவையே காமச்சுவையாகும். இச்சுவையைத் தொல்காப்பியர் 'உவகைச் சுவை' தோன்றும் அடிப்படையாகக் காட்டுகிறார். உவகைச்சுவை செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்னும் நான்கைப்பற்றித் தோன்றுவதாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** திங்கள் நுதல்வியர்க்கும்[1] வாய்துடிக்கும்[2] கண்சிவக்கும்[3].........

**பொருள்:** தலைவி தன்னுடைய கொங்கைகள் என் மீது அழுந்துமாறு என்னை கூடித் தழுவுவாள்

இப்பாடலில் கூறப்பட்ட பொருள்கள் கூடல் ஊடல் என்பனவாம். இவை இரண்டும் காமம் பற்றியவை. இவ்விரண்டிலும் காமச்சுவையின் குறிப்புகள்

ஒரு நிகரனவாய் கூறப்பட்டுள்ளன. அவை நுதல் வியர்த்தல், முதலியனவாம். அதனால் இது காமச்சுவை ஆயிற்று.

**அவலச் சுவை**: அவலச்சுவை காரணமாகத் தோன்றும் சுவை அவலச்சுவை ஆகும். இச்சுவையைத் தொல்காப்பியர் அழுகை எனக் குறிப்பிடுகின்றார். இது இளிவு, இழவு, அசைவு, வறுமை என்னும் நான்கனைப்பற்றித் தோன்றுவதாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** கழல் சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும்.........

**பொருள்:** வீரக்கழல் அணிந்த கால்களை உடைய ஓர் இளைஞன் தனக்குப் பற்றுள்ள ஒன்றினைப் பிரிவதால் தோன்றுவது அவலம் என்பர். அதற்கேற்ப மனைவியை இழந்து வருந்தும் தலைவனின் புலம்பலை காட்டுவதால் இது அவலச்சுவை ஆயிற்று.

**உருத்திரச் சுவை**: சினத்தின் காரணமாகத் தோன்றும் சுவை உருத்திரச்சுவையாகும். தொல்காப்பியர் இதனை வெகுளி என குறிப்பிடுகிறார். இது உறுப்பறை, குடிகோள், அலை, கொலை எனும் நான்கனைப்பற்றிப் பிறப்பதாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** கைபிசையா[1] வாய்மடியா[2] கண்சிவவா[3] வெய்துயிரா[4]..........

**பொருள்:** கொடிய போர்க்களத்தின் கண்ணே வென்று வெற்றி மாலை....... பகை அரசன் தன் மகளை தருக எனக் கேட்டால் ஆகிய செயலால் உருத்திரச் சுவை தோன்றிற்று. உள்ளே நிகழ்ந்த சினமானது, கைபிசைதல் முதலாகிய குறிப்புகளால் காட்டப்பட்டது. இதனால் இப்பாடல் உருத்திரச்சுவையாயிற்று.

**நகைச்சுவை:** நகை காரணமாகத் தோன்றும் சுவை நகைச்சுவையாகும். இதனைத் தொல்காப்பியர் நகை என்றே காட்டுகின்றார். மேலும் மெய்ப்பாடுகளுள் முதலாவதாக நகையை குறிப்பிடுகிறார். இது எள்ளல், இளமை, பேதைமை, மடம் என்னும் நான்கனைப் பற்றித் தோன்றும். **எடுத்துக்காட்டுப் பாடல்:** நாண்போலும் தன்மனைக்குத் தான்சேறல் இந்நின்ற.......

**பொருள்:** தோழியே இதனை காண்பாயாக, தன்னுடைய வீட்டிற்கு பழங்காலத்தில் களவு செய்ய கருதுவோரின் செயல்பாட்டினை உள்ளே இருப்போர் அறிந்துகொள்வார்கள். வீட்டில் நுழையும் போதே தாக்குவர் அதிலிருந்து தப்பிக்க கள்வர்கள் முன்னேற்பாடாக தாம் செய்து வைத்திருக்கும் பொய்த்தலையை முதலில் நீட்டுவர். அதற்கு ஏதேனும் துன்பம் நேருமானால் ஆட்கள் இருப்பதை அறிந்து நீங்குவர். இல்லையேல் உள்ளே புகுந்து கள்வாடுவர். இச்செயல் தலைவன் செயலுக்கு ஒத்ததாகக் காட்டப்படுகிறது. இப்பாணனுக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால் தலைவன் ஓடி விடுவான் என்பதை நாண்போலும் தோழி எனக் கூறுவதும், பாணனைப் பொய்த்தலையாய்க் காட்டுவதும் நகைச்சுவையைத் தோற்றுவிக்கின்றன.

## அலகு - 5 (தன்மேம்பாட்டுரையணி, பரியாய அணி, ஒப்புமை கூட்டணி, மாறுபடுபுகழ்நிலையணி, புகழாப்புகழ்ச்சி அணி, வாழ்த்தணி)

1. **தன்மேம்பாட்டுரையணிப் பற்றி விளக்குக. (5 மதிப்பெண்கள்)**

ஒருவனுடைய ஆற்றலை பிறர் அறியார். அவ்விடங்களில் தன்னுடைய ஆற்றலை தானே எடுத்துக் கூறுவார். இவ்வாறு எடுத்து மொழிவதே தன்மேம்பாட்டுரை என்னும் அணியாகும். ஊக்கத்தை ஏற்படுத்துவதால் இதனை ஊக்க அணி எனவும் கூறுவர். புறத்துறையைச் சார்ந்த நெடுமொழி கூறல் நெடுமொழி வஞ்சி ஆகியவை தன்மேம்பாட்டுரை வகையைச் சார்ந்ததாகும்.

**தன்மேம்பாட்டுரை அணியின் இலக்கணம்:** தான் தன் புகழ்வது தம்மேம்பாட்டு உரை.

**பொருள்:** ஒருவன் தன்னைத்தானே புகழ்ந்து சொல்லுவது தம்மேம்பாட்டுரை அணியாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** எஞ்சினார் இல்லை எனக்கு எதிரா இன்னுயிர் கொண்டு..........

**பொருள்:** கொடிய போரில் எனக்கு எதிராக வந்து போர் செய்து தமது இனிய உயிரை காப்பாற்றிக் கொண்டு பிழைத்தவர் எவருமிலர். இப்பாடலில் எனக்கு எதிராக வந்தோர் எவரும் உயிரோடு செல்ல முடியாது என்பதும் என் அம்பு முதுகில் பாயாது என்பதும் ஒருவன் தன்னைத்தானே புகழ்ந்து கொள்வதாய் அமைந்துள்ளன. ஆதலால் இது தன்மேம்பாட்டுரை அணி ஆயிற்று.

2. **பரியாய அணி குறித்து விளக்குக.**

கவிஞன் தான் கூறக் கருதிய ஒன்றனை அவ்விடத்து கூறுதல் தகாது என கருதி பிரிதொன்றால் அப் பொருளை விளக்குவது பரியாய அணி ஆகும். இதனைப் பிறிதின் நவிற்சி எனவும் கூறுவர். இதனை பரியா யோக்தம் என்பர். பரியாயம் என்பதற்கு சாமார்த்தியமாக அறிவிக்கும் வார்த்தை என்பது பொருளாகும்.

**பரியாய அணியின் இலக்கணம்:**

**நூற்பா:** 'கருதுயது கிளவாது அப்பொருள் தோன்ற

பிறிது ஒன்று உரைப்பது பரியாய மே'

**பொருள்**: தான் எண்ணியதைக் கூறாது அப்பொருள் தோன்ற பிறிதொன்றைக் கூறுவது பரியாயம் என்னும் அணியாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: மின்நிகராம் மாதே விரைசாந்துடன் புணர்ந்து.......

**பொருள்:** மின்னல் கொடி போன்றவளே! மணம் கமழும் சந்தன மரத்தை தழுவி நிற்கிறது ஒரு மாதவி கொடி.

இப்பாடல் குறியிடத்து உய்த்து நீங்கும் தோழியின் கூற்றாகும். தலைவனோடு தலைவியை சேர்த்து வைக்க கருதிய தோழி அதனை நேராகக் கூறவில்லை கூடுதற்கு தான் தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகப் பூப்பறித்து உன் கூந்தலில் சூட வருகிறேன் என்று வேறொரு செயலைத் திறம்பட கூறியதால் இது பரியாய அணி ஆயிற்று.

3. **சிலேடை அணியின் வகைகளை விளக்குக.**

செய்யுளில் இடம்பெறும் ஒரு சொல்லோ தொடரோ தனித்து நின்றும் பிரிந்து நின்றும் பல பொருள்களைத் தரும், அவ்வாறு பல பொருள் பட அமைவதை சிலேடை அணி என்பர். சிலேடை என்னும் சொல்லுக்கு தழுவுதல் உடையது என்பது பொருளாகும். பல பொருள் உடையதாக சொற்களை அருகில் தேர்ந்தெடுத்து அமைக்கும் பணி நுட்பமும் திட்பமும் உடைய புலவருக்கு இயலுவதாகும். இதனை இரட்டுற மொழிதலணி என்றும் கூறுவர். சிலேஷை என்னும் சமஸ்கிருத சொல் சிலேடை என்னும் வடமொழி ஆயிற்று. இச்சொல்லுக்கு துணை பொருள் தருதல் என்பது பொருளாகும்.

**சிலேடை அணியின் வகைகள்:**

**நூற்பா:** 'ஒருவகைச் சொற்றொடர் பலபொருள் பெற்றி
தெரிவு தர வருவது சிலேடை ஆகும்.'

**பொருள்:** மேற்கூறப்பட்ட சிலேடை செம்மொழிச் சிலேடை பிரிமொழிச் சிலேடை என இரு வகைப்படும். அவற்றுள்,

**செம்மொழிச் சிலேடை:** பிரிக்கப்படும் தன்மையற்று நேரே நின்று பல பொருள் தரும் சொற்களால் அமைவது செம்மொழி சிலேடை ஆகும். **எடுத்துக்காட்டுப் பாடல்**: செங்கரங்க லான்இரவு நீக்கும் திறன் புரிந்து......................

இப்பாடல் கதிரவனும் சோழனுக்கும் சிலேடையாய் அமைந்துள்ளது.

**பொருள்:** 1. சூரியன் சிவந்த ஒளிக்கதிர்களால் இருளை நீக்கும் திறன் மிகுந்தது. 2. தாமரை விரும்பும் சிறப்புடையது 3.மேல்நோக்கிய தோற்றத்தை உடையது 4.ஒற்றைச் சக்கரத்தால் ஆகிய ஊர்தியை உடையது 5.கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தின் மேல் அமைந்த வானவெளியில் இயங்குவது என்னும் இயல்புகளை உடையது சூரியன்.

சோழன் 1. சிவந்த கைகளைக் கொண்டு இவ்வுலகத்தில் உள்ளோரின் வறுமையை நீக்கும் தொழிலில் மிகுந்திருத்தல், 2. தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் செல்வத்தைப் பெருக்குதல் 3.மேம்பட்டு நிற்கின்ற செல்வ வளத்தைப் பெற்றிருத்தல் 4.தனித்த ஆணைச் சக்கரத்தை உடைமை

5.கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் உள்ளதாய் விரும்பப்படுகின்ற உயர்ந்த நெறியில் ஒழுகுதல் என்னும் இயல்புகளை உடையவன் சோழன்.

இப்பாடலில் உள்ள சொற்களும் தொடர்களும் சூரியன், சோழன் ஆகிய இரு பொருட்களுக்கும் பொருந்துவதாக இருப்பதால் இது சிலேடை ஆயிற்று. ஒரே நிலையில் நின்ற சொற்கள் அந்நிலையில் சூரியன் சோழன் ஆகிய இரண்டு பொருள்களுக்கும் பிரிந்து பொருள்படுவதால் இது செம்மொழிச் சிலேடை ஆயிற்று.

**பிரிமொழிச் சிலேடை:** ஒருவகையாய் நின்ற சொல்லையோ தொடரையோ பிரித்துப் பொருளுக்கு ஏற்ப கொள்ளப்படுவது பிரிமொழிச் சிலேடை ஆகும். எடுத்துக்காட்டுப் பாடல்: தள்ளா விடத்தேர் தடந்தா மரைஅடைய............

இப்பாடல் 1. சோழனின் ஆட்சியை ஏற்றுக் கொண்டோரின் நாட்டின் நிலையையும் 2. ஏற்றுக் கொள்ளாதவரின் நாட்டின் நிலையையும் எடுத்துரைக்கும் சிலேடையாகும். 1.சோழனின் மனம் விரும்ப நடந்தோர் நாட்டின் ஆக்கத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளப்பட்ட முறை. **எடுத்துக்காட்டுப் பாடல்:** தள்ளா இடத்து ஏர் தடந்தா மரைஅடைய............

**பொருள்:** எம் கோமான் ஆக விளங்குபவன் சோழன். அவனுடைய உள்ளம் சோழனின் மனம் வெறுக்க வாழ்ந்தோர் நாட்டின் அழிவிற்கு தக்க அமைத்துக் கொள்ளப்பட்ட முறை.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** தள்ளா விடத்தேர் தடந்தா மரைஅடைய............

எம் கோமானாக விளங்குபவன் சோழன். அவனுடைய உள்ளம் வெறுக்கும் படி நடந்து கொண்ட நாடுகள் சில உள. அங்கு அசையாத விடத்தேர் என்னும் மரங்களை உடைய மலைகள் காணப்பட்டன. இவ்வாறு இரு நிலைக்கேற்ப பிரித்து பொருள் கொள்ளப்பட்டதால் இது பிரிமொழி சிலேடை ஆயிற்று.

4. **ஒப்புமைக் கூட்டவணி குறித்து விவரிக்க**.

கவிஞன் தான் கருதிய பொருளை சொல்லுமிடத்து அப்பொருளின் குணத்தை விட மிகுந்த குணமுடைய வேறு பொருள்களை ஒருங்கே சொல்லுவான். இதுவே ஒப்புமை கூட்டம் என்னும் அணியாகும்.

ஒப்புமைக் கூட்ட அணியின் இலக்கணம்:

‘கருதிய குணத்தின் மிகு பொருள் உடன் வைத்து

ஒரு பொருள் உரைப்பது ஒப்புமை கூட்டம்’

பொருள்: ஒரு பொருளை சொல்லுமிடத்து தான் கருதிய குணம் முதலியவற்றின் மிகுதியானப் பொருளைக் கூட வைத்துச் சொல்லுவது ஒப்புமைக் கூட்டம் என்னும் அணியாகும்.

**ஒப்புமை கூட்டணியின் வகைகள்:**

‘புகழினும்[1] பழிப்பினும்[2] புலப்படும் அதுவே’

பொருள்: ஒப்புமை கூட்டம் என்னும் அணி ஒன்றனை புகழ்தற் கண்ணும் பழித்தற் கண்ணும் தோன்றும். ஆகையால் அது 1. புகழ் ஒப்புமைக் கூட்டம், 2. பழிப்பு ஒப்புமைக் கூட்டம் என இரு வகைப்படும்.

1. **புகழ் ஒப்புமை கூட்டம்**: புகழத் தக்கப் பொருட்களை ஒருங்கு கூறுவது புகழ் ஒப்புமைக் கூட்டமாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** பூண்தாங்கு கொங்கை பொரவே குழை பொருப்பும்........

**பொருள்:** 1. அணிகளை அணிந்த உமையம்மையின் மார்புகள் சிவபெருமானாகிய ஏகாம்பரநாதர், தூண்டா விளக்கு, சான்றோராகிய பொருள்கள் மூன்றும் புகழத்தக்க உயர்ந்த பொருட்கள். இம்மூன்றும் ஒரு நிகரனவாய்த் தொகுத்துத் கூறப்பட்டிருப்பதால் இது புகழ் ஒப்புமை கூட்டம் ஆயிற்று.

2. **பழிப்பு ஒப்புமைக் கூட்டம்**: பழிக்கத்தக்கப் பொருட்களை ஒருங்கு கூறுவது பழிப்பு ஒப்புமைக் கூட்டமாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: கொள்பொருள் வெஃகிகுடி அலைக்கும் வேந்தனும்................

**பொருள்:** பெரும் பொருள் கைப்பற்றக்கருதி தன் கீழ் வாழும் கொடுங்கோலன் பொய்க்கரியாளர் கற்பில்லா மனைவி ஆகியோர் இகழத்தக்கவர். பழிப்பிற்குரிய இம்மூவரும் ஒரு நிகரனவாய்த் தொகுத்துக் கூறப்பட்டிருப்பதால் இது பழிப்பு ஒப்புமைக் கூட்டம் ஆயிற்று.

5. **மாறுபடுபுகழ்நிலையணி குறித்து விளக்குக.**

கவிஞன் தான் பழிக்கக் கருதிய பொருளைக் கூறாது மற்றொரு பொருளைப் புகழ்ந்து கூறுவான். இதனை மாறுபடுபுகழ்நிலையணி என்பர். இதற்கு வஞ்சப்புகழ்ச்சி அணி, தெளிவில் புகழ்ச்சியணி என்னும் வேறு பெயர்களும் உண்டு.

**மாறுபடுபுகழ்நிலையணியின் இலக்கணம்:**

**நூற்பா:** 'கருதிய பொருள் தொகுத்து ஆங்கு அது பழித்தற்கு

வேறு ஒன்று புகழ்வது மாறுபடுபுகழ்நிலையணி'

**பொருள்:** ஒருவன் சொல்லக் கருதிய பொருளின் இகழ்ச்சித் தன்மை வெளிப்படுமாறு மற்றொரு பொருளைப் புகழ்ந்துரைப்பது மாறுபடுபுகழ்நிலையணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**: இரவு அரியா யாவரையும் பின் செல்லா நல்ல.......

**பொருள்**: இந்தப் புள்ளி மான்கள் பிறரிடம் சென்று தமக்கு என்ன வேண்டும் என்று இரந்து நிற்றலை அறியா.

பொருள் உடையவரிடம் சென்று யாசித்து பெறுதல் அவர் பின் சென்று தன் குறையைக் கூறுதல் பிறர் படைத்தவற்றை உண்ணுதல் ஆகிய குறைகள் கைகால்களைப் பெற்ற மானிடரிடம் உண்டு. முயற்சியால் வாழ வழி இருந்தும் அதனை செய்யாது பிறரைச் சார்ந்து வாழ்வோரை பழிக்க எண்ணுகின்றான் கவிஞன். அதனை மறைத்து அச்செயல்கள் அற்ற மானை புகழ்கின்றான்.

இரவலனை இழித்துக்கூற மானைப் புகழ்வதால் இது மாறுபடுபுகழ்நிலையணி ஆயிற்று.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** போதும் தளிரும் புனைந்துமணம் புணர்ந்து..................

**பொருள்:** தோழியே மகளிர் பூவினாலும் தளிரினாலும் அலங்கரிக்கப்படுவர்................

களவில் கூடிவந்த தலைவியைப் பழிக்கக் கருதுகிறான் கவிஞன். அதனை மறைத்து உலகத்தார் அறிய மாமரத்தின் கிளைகளைத் தழுவி படர்கின்ற மாதவிக்கொடியை புகழ்கின்றான். ஆதலால் இது மாறுபடுபுகழ்நிலையணி.

6. **புகழாப்புகழ்ச்சி அணி பற்றி விவரி.**

ஒன்றைப் பழித்து கூறுவது போன்ற தன்மையால் அப்பொருளுக்கு மேம்பாடு தோன்றும் படியாக உரைப்பது புகழாப்புகழ்ச்சி அணி ஆகும்.

**புகழாப்புகழ்ச்சி அணியின் இலக்கணம்:** பழிப்பது போலும் பான்மையின் மேன்மை புலப்பட மொழிவது புகழாப்புகழ்ச்சி.

**பொருள்:** ஒன்றனைப் பழித்துக் கூறுவது போன்றத் தன்மையான் அதற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப்புகழ்ச்சி என்னும் அணியாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** போர்வேலின் வென்றதூஉம் பல்புகழால் போர்த்ததூஉம்.........

**பொருள்:** நீர் வளம் மிகுந்த காவிரி நாட்டுக்கு உரிமை உடையவன் சோழன். எளிமையாக திருமால் ஓர் அடியைக் கொண்டு இவ்வுலகத்தை அளந்தான். அந்த ஓரடி நிலத்தையே சோழன் வென்றும், மூடியும், தாங்கியும், காத்தும் துன்பப்படுகிறான் என பழித்துக் கூறப்பட்டது. இவ்வாறு கூறியதும் சோழன் இவ்வுலகத்தை ஒருங்கே ஆட்சி புரிகிறான் என மேம்பாடு தோன்ற கூறியதால் பழிப்பது போலப் புகழப் பெற்று புகழாப்புகழ்ச்சி ஆயிற்று.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** நினைவறிய பல்புகழாற் நின்புலத்துத் தொல்லோர்...............

**பொருள்**: மனுதர்ம நூலில் கூறப்பட்ட முறையைப் பின்பற்றி நடக்கின்ற சோழனின் குலத்து முன்னோர்களுக்கு உரிமையானவள் திருமகள். அவளையே நீயும் உரிமையாக்கிக் கொண்டிருக்கின்றாய் என பழித்தாற் போலக் கூறப்பட்டது ஆயினும் வழிவழியாக மாறாமல் உலகத்தை ஆளுதலாகிய பேரைப் பெற்று பெருஞ்செல்வம் உடையவனாய் திகழ்பவன் என மேம்படுத்திக் கூறியதால் பழிப்பது போல புகழ் பெற்று புகழாப்புகழ்ச்சி அணி ஆயிற்று.

7. **வாழ்த்தணி குறித்து விவரி.**

இவருக்கு இன்னது பொருந்துக என்று கவிஞன் தான் நினைத்ததை விரித்து சொல்லுவது வாழ்த்தணி ஆகும். இதனை வடநூலார் ஆசி எனக் குறிப்பர். தாம் விரும்பிய நன்மை ஒருவருக்கு கிட்டும்படி விண்ணப்பம் செய்த ஆசியாகும்.

**வாழ்த்தணியின் இலக்கணம்:**

**நூற்பா:** ‘இன்னாருக்கு இன்னது ஏக என்று தாம்

முன்னியது கிளத்தல் வாழ்த்து என மொழிப’

**பொருள்:** இன்ன தன்மை உடையாருக்கு இன்னது நிகழ்க என்று கவிஞன் தான் கருதியதனை விதிப்பது வாழ்த்து என்னும் அணி என்று சொல்லுவர் புலவர்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:** ‘மூவாத்தமிழ் பயந்த முன்னூல் முனி வாழி..........’

**பொருள்:** அழியாத தமிழ்மொழியின் கண் தோன்றிய பழமையான நூல்களை உணர்ந்த அகத்திய முனிவர் வாழ்க. இப்பாடலில் அனபாயன் நிறை வாழ்நாளை பெற்று வாழ்க என கவிஞர் வாழ்த்தினார். அவன் சிறப்பாக வாழவே மக்கள் சிறப்பு வகையால் நாட்டிற்கு வேண்டிய மழையை வாழ்த்தினார். அறவோர்களாகிய அந்தணர்களை வாழ்த்தினார். பயன் தருகின்ற பசுக்களை வாழ்த்தினார். தமிழ் நூல் உணர்ந்தோரை வாழ்த்தும் போக்கில் தமிழையும் வாழ்த்தினார். இவ்வாறு நன்மை பயப்பன ஆகிய பலவற்றையும் வாழ்த்தியதால் இவ்வணி வாழ்த்தணி ஆயிற்று.

**8. பாவிக அணி பற்றி விளக்குக**

ஒரு பாடலாலோ (குளகம்) பல பாடல்களாலோ (முத்தகம்) ஆகிய செய்யுள் வகைகளுள் அடங்காமல் தொடர் நிலையாகப் பாடப்பெறுவது காப்பிய வகையாகும். அவ்வகையுள் ஒன்றை முழுவதுமாக நோக்கி கொள்ளப்படுவதாய் கவிஞனால் கருதிச் செய்யப்படுவதே பாவிகம் என்னும் அணியாகும்.

**பாவிக அணியின் இலக்கணம்:**

**நூற்பா:** 'பாவிகம் என்பது காப்பியப் பண்பே'

**பொருள்:** பாவிகம் என்று சொல்லப்படுவது பொருள் தொடர்நிலைச் செய்யுள் திறத்தின் கவியால் கூறிச் செய்யப்படுவதொரு குணமாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:**

'பிறனில் விழைவோர் கிளையோடும் கெடுப
பொறையில் சிறந்த கவசம் இல்லை
வாய்மையில் கடியதோர் வாளி இல்லை'

**பொருள்:** பிறனில் எனத் தொடங்குவது ராமாயணத்தால் அறியப்படுவதும் இதற்குப் பொருள் பிறன் மனைவியை விரும்புவோர் சுற்றத்தோடும் என்பதாகும். பொறையில் எனத் தொடங்குவது மகாபாரதத்தால் அறியப்படுவதாகும். இதற்குப் பொருள் பொறுமையைக் காட்டிலும் சிறப்பான பாதுகாப்பு இல்லை என்பதாகும். வாய்மையில் எனத் தொடங்குவது அரிச்சந்திர புராணத்தால் அறியப்படுவதாகும். இதற்குப் பொருள் உண்மையை காட்டிலும் உறுதி வாய்ந்த அன்பு எதுவும் இல்லை என்பதாகும்.